

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களால் உண்டியல் மற்றும் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்றுப் பொன் இனங்களில் திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, இதர இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் உருக்காலையில் உருக்கி தூய தங்கக்கட்டிகளாக முதலீடு செய்யப்பட்டதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தினை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர். அருள்முருகன் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயிற்சியாளர்கள் ரோமோனிய நாட்டைச் சேர்ந்த தடகளப் பயிற்சியாளர் பெட்ராஸ் பெட்ரோசியன் (Bedros Bedrosian), டச்சு நாட்டைச் சேர்ந்த ஹாக்கி பயிற்சியாளர் எரிக் வோனிக் (Eric Wonink), அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சியாளர் சஞ்சய் சுந்தரம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

## திருச்செந்தூர் கோயிலுக்கு காணிக்கையாகப் பெறப்பட்ட

# ரூ.99.78 கோடி மதிப்புள்ள தங்கம் - வங்கியில் முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - தங்க முதலீட்டுப் பத்திரத்தை அறங்காவலர் குழுவிடம் வழங்கினார்!

சென்னை, செப். 5-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களால் உண்டியல் மற்றும் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்றுப் பொன் இனங்களில் திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, இதர இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் உருக்காலையில் உருக்கி தூய தங்கக் கட்டிகளாக முதலீடு செய்யப்பட்டதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தினை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர். அருள் முருகன் அவர்களிடம் வழங்கினார்.

2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "கடந்த 10 ஆண்டுகளாக திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத்தங்கமாக மாற்றி திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலமாக திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை கண்காணிப்பதற்கு 3 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மூன்று பகுதிகளாக பிரித்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்கள் க.ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா ஆகியோர் தலைமையில் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களால் உண்டியல் மற்றும் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்று பொன் இனங்கள் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா தலைமையிலான குழுவினர் முன்னிலையில் மதிப்பீடு செய்யப்பட்டு, அரக்கு, அழுக்கு, போலிக்கற்கள் மற்றும் இதர உலோகங்களை நீக்கி, பிரித்தெடுக்கப்பட்ட பலமாற்றுப் பொன் இனங்கள் அறங்காவலர் குழு தீர்மானத்தின் அடிப்படையில் மும்பையிலுள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான உருக்காலையில் உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி பாரத ஸ்டேட் வங்கியின் *Revamped Gold Deposit Scheme*, 2015 திட்டத்தின் கீழ் தங்கப் பத்திரமாக முதலீடு செய்திடும் பொருட்டு, 168 கிலோ 68 கிராம் 889 மில்லி கிராம் எடையுள்ள சுத்த தங்கக் கட்டிகள் திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பெயரில் பாரத ஸ்டேட் வங்கி, மும்பை கிளையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் மதிப்பு ரூ.99,77,64,472/ ஆகும். மேற்படி தங்க மதிப்பீட்டிற்கு வழங்கப்படுகின்ற வட்டி வீதம் 2.25% ஆகும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு கிடைக்கப்பெறும் வட்டித்தொகையான ரூ.2.25 கோடி இத்திருக்கோயில் மேம்பாட்டு பணிகளுக்கு பயன்படுத்தப்படும். இதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தினை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

இதுபோன்று ஏற்கனவே திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி மும்பை பாரத ஸ்டேட் வங்கியில் தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்ததன் மூலம் ஆண்டொன்றுக்கு விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.24.09 லட்சமும், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.1.04 கோடியும், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.39.13 லட்சமும், காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு, காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.39.29 லட்சமும் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச சிறார் கலைப்போட்டியில் வெற்றி பெற்ற செல்வி ஹான்னா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து தான் வரைந்த ஓவியத்தை முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். உடன் அவரது தந்தை முனைவர் ஃபிரான்சிஸ் அடைக்கலம் மற்றும் திருமதி ஜே. சில்வியா ஆகியோர் உள்ளனர்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் ஜனநாயக விரோதமானது!

## சீத்தாராம் யெச்சூரி கடும் விமர்சனம்!

மும்பை, செப். 5 -

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற மோடி அரசின் நகர்வு முற்றிலும் ஜன நாயகவிரோதமானது; நடைமுறை சாத்தியமில்லாதது; ஏராளமான குழப்பங்களுக்கு இட்டுச் செல்லக்கூடியது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செய லாளர் சீத்தாராம் யெச்சூரி விமர்சித்துள் ளார்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற கருத்தினை ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு அரசியல் களத்தில் விதைத்துள்ளது. மோடி அரசின் இந்த ஆபத்தான நகர்வுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. இந்நிலையில் மும்பையில் நடை பெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற சீத்தாராம் யெச்சூரி, "ஒன்றிய மோடி அரசு, ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கருத்தினை செயல்படுத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது.



நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் என்னவென்று இதுவரை அறிவிக்கப்படவில்லை; அதற்கு முன்பே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக ஆராய் வதற்கு ஒரு குழு அமைத்திருப்பது மற்றும் ஆளும் அரசுத் தரப்பிலிருந்து அதற்கு ஆதரவாக தொடர்ந்து கருத்துக்களை பரப்புவது என்பது, இத்திட்டத்தை செயல்படுத்தும் அரசின் நோக்கத்தையே பிரதிபலிக்கிறது. இந்தியா போன்ற நாட்டில் இத்திட்டம் நடைமுறை சாத்தியமில்லாதது" என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்திய நாட்டில் அனைத்து மாநிலங்களிலுமே ஒரு தனிப்பட்ட கட்சி மிகப் பெரும் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சிக்கு வருவது என்பது கிட்டத்தட்ட பழைய கதையாகிவிட்டது. இந்த நிலையில், தேர்தலின் போது தொங்கு நாடாளுமன்றம், தொங்கு சட்டமன்றம் அமைந்தாலோ அல்லது ஒரு தனிக்கட்சி பெரும்பான்மை பெற முடியாமல் போனாலோ, இவர்கள் சொல்லும் திட்டத்தின்படி மிகப்பெரிய பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படும்.

ஒரு கட்சி, கொள்கை பிரச்சினை காரணமாகவோ அல்லது இதர காரணங்களுக்கோ அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டால், அதற்கு பிறகு அடுத்த தேர்தல் நடைபெறும் வரை, எந்தக் கூட்டணியிலும் இணைய முடியாமல் அல்லது தங்களது கொள் கைக்கு பொருத்தமான அணி சேர்க்கையை மேற்கொள்ள முடியா மல் தனித்தே நிற்க வேண்டிய நிலை ஏற்படும்.

சில தருணங்களில் ஆதரவளிக்கும் கட்சி வாபஸ்பெறும் நிலையில், ஆட்சிக்கவிழுமானால் அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்படுமா அல்லது பெரும்பான்மை இழந்த அரசாங்கமே அடுத்த தேர்தல் வரை அதிகாரத்தில் நீடிக்குமா என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் அதிகாரத்தை கையில் வைத்திருக்க முடியும்.

ஆனால் மேலே குறிப்பிட்டது போன்ற சூழல் ஏற்படும் பட்சத்தில், அடுத்த தேர்தலுக்கான காலம் வரை காத்திருங்கள் என்று கூறி மத்தியில் ஆளும் கட்சியே மாநிலத்தின் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் ஆட்சி மூலமாக தனது கைகளில் எடுத்துக் கொள்ளும் மிகப்பெரும் ஆபத்துக்கள் அடங்கியுள்ளன. 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பது தேர்தல் செலவினங்களை குறைப்பதற்காக முன்வைக்கப்படுகிறது என்ற ஒன்றிய அரசின் வாதம் நிராகரிக்கப்பட வேண்டியது ஆகும்.

இவ்வாறு சீத்தாராம் யெச்சூரி கூறினார்.

இதைத்தொடர்ந்து அவர் வெளி யிட்ட டுவிட்டர் பதிவில், "நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்களில் ஒரு அரசு தனது பெரும்பான்மையை இழந்துவிட்டது, ஆட்சியில் தொடர்வது என்பது சட்டவிரோதமானது. அதேபோல, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமலாக்கி, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை பெற்றிருப்பதற்கான மக்களின் உரிமையை மறுப்பது என்பது ஜனநாயக விரோத மானது" என்று குறிப்பிட்டுள்ளார்.

# சைதை கிழக்கு - சைதை மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

சென்னை, செப். 5 -

சைதை கிழக்கு மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. பகுதி கழகச் செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., முன்னிலை வகிக்க, பகுதி அவைத் தலைவர்கள் களக்காடி எல்லப்பன், இ.முருகேசன் ஆகியோர் தலைமை தாங்குகின்றனர். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்.

சென்னை தெற்குமாவட்டம் சைதை கிழக்கு - மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (05-09-2023 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் சைதாப்பேட்டை, பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர்கள் களக்காடி எல்லப்பன், இ.முருகேசன் ஆகியோர் தலைமையிலும் பகுதி கழகச் செயலாளர்கள் இரா. துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டதில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துக் கொண்டு பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு சைதை கிழக்கு சைதை மேற்கு பகுதிக் குட்பட்ட தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் ஆகியோர் மட்டும் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.


